பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 29 திங்கட்கிழமை 14.12.2020 கதிர் 39

**இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்பான அறிவிப்பு வெளியிடல் சம்பந்தமாக நேற்று இப்பத்தியில் நான் நியாயமான ஒரு கேள்வியை எழுப்பியிருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் பக்கம்02 »

# மருதனார்மடம் பொதுச்சந்தை கொத்தணி: மேலும் 26 பேருக்கு கொரோனாத் தொற்று!

## அநுராதபுரத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட மாதிரிகளின் முடிவுகள் இன்னமும் வெளிவரவில்லை

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்.மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கொக்குவில், உரும்பிராய், நவாலி, சங்கானை, பண்டத்தரிப்பு, கைதடி, காங்கேசன்துறை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் தலா ஒருவரும், அளவெட்டி, கீரிமலை, மானிப்பாய், உடுவில், இணுவில், சுன்னாகம், ஆகிய இடங்களில் தலா இருவரும், தெல்லிப்பழை, ஏழாலை ஆகிய பகுதிகளில் தலா மூவரும் என்ற அடிப்படையிலேயே இந்த 26 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

இதன்மூலம் பக்கம் 11 »

# உடுவில் 'லொக்டவுண்' நீக்கம்!

## கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை வீடுகளுக்குள் சுயதனிமைப்படுத்தும் பொறிமுறை அமுல்




(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 14

யாழ்., உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டு அந்தப் பிரதேசம் நேற்றிரவு விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் நேற்றிரவு 10.30 மணிக்கு அறிவித்தார். பக்கம் 02 »

# கொரோனா எண்ணிக்கையை மறைப்பதும் தொற்றாளர் தலைமறைவாகுவதும் குற்றமே

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப்போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். அதிகாரிகளும் தொற்றாளர்களும் சமூகத்தின் பக்கம் 02 »

# கொரோனாச் சாவு 152 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர்.

62 வயது பெண், 71 மற்றும் 76 வயதுகளையுடைய இரு ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி பக்கம் 02 »

# உடுவில், தெல்லிப்பழைக் கோட்டங்களின் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடல்

(எஸ்.நிதர்ஷன்,ந.லோகதயாளன்)

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களின் பாடசாலைகள் இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று வடக்கு மாகாண கல்வி பக்கம் 02 »

# கண்டி டிரினிட்டியிலும் கொரோனா மையம்

கண்டி,டிசெ.14

கண்டி டிரினிட்டி கல்லூரியின் உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தில் வசிப்பவர்கள் 13 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதியாகி உள்ளதாக கண்டி நகராட்சி ஆணையர் அமிலா நவரத்னா தெரிவித்தார்.

முன்னதாக பக்கம் 02 »

# நேற்றும் 655 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 655 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இது வரையில் 29 ஆயிரத்த 152 பேருக்கு பக்கம் 02 »

# தொற்றாளர் எண்ணிக்கையை மறைக்க இடமளிக்கமாட்டோம்!

## சுகாதார அமைச்சர் திட்டவட்டம்



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் மறைப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

– இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பக்கம் 02 »







# அரசியல் கைதிகள் விடுதலைக்காக அனைவரும் ஓரணியில் நில்லுங்கள்

## முன்னாள் எம்.பி. சரவணபவன் வலியுறுத்து



தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பில் அரச கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்கள் இன்றி, குறுகிய கட்சி நலன்களைப் புறந்தள்ளி, தனித்தோடும் குறுக்கு வழிகளை – தாங்கள் மட்டுமே தூய்மையானவர்கள், ஏனையோர்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்ற இறுமாப்பு எண்ணங்களைத் தவிர்த்து சகல பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நான் எழுப்பிய அக்கேள்விக்கு கொழும்பில் உரிய பதிலைத் தந்திருக்கின்றார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

*“கொவிட் பரவல் சம்பந்தமாகத் தவறான செய்திகள், தகவல்களைப் பரப்பினால் தண்டனை உண்டு என்பதுஎனக்குத் தெரியும். மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய செய்தியை மறைத்தால் அதற்குத்தண்டனை ஏதும் கிடையாதா?”* – என்பதே நேற்றைய என் பத்தியின் முத்தாய்ப்புக் கேள்வி.

*“கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை மறைப்பதும், கொரோனாத் தொற்றாளர்கள் தலைமறைவாகத் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், கொரோனாத் தொற்றாளர்களும் அசமந்தப்போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்”* – என்று வெளிப்படையாகப் பேசியிருக்கின்றார் இராணுவத் தளபதி.

கொவிட் பரம்பல் விவகாரத்தில் உயர்ந்த மட்டத்தில் பேசக் கூடிய அதிகாரி அவர்தான். நேற்று முன்தினம் சனியன்று யாழ். மாவட்டத்தில் 31 பேருக்குக் கொரோனாத் தொற்று என்று ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

ஆனால், ஆறே ஆறு பேருக்கு மட்டுமே தொற்று என்று அன்றிரவு யாழ்ப்பாணத்தில் அதிகாரிகள் அறிவித்தனர். ஆனால், அடுத்தநாள் விடிகாலையில் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி வெளியிட்ட அறிவிப்பில் முதல் நாள் யாழ் மாவட்டத்தில் 36 பேருக்குத் தொற்று ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இடையில் இந்த முப்பது தொற்றாளர் பற்றிய தகவலை முழுங்கிய – அல்லது இராணுவத் தளபதியின் வாசகத்தில் கூறுவதானால் ’தொற்றாளர் எண்ணிக்கையை மறைத்த’ அதிகாரி யார்?நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி ஒரே வீட்டுக்குள் ஆறு பேருக்குத் தொற்று அடையாளம் காணப்பட்டமையை மட்டும் வைத்து ஒரு பிரதேச செயலர் பிரிவை முடக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்க முடியாது என்பது நாம் சுட்டிக்காட்டும் விடயம். ஆகவே, அந்தத் தீர்மானத்தை யாழ் அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் எல்லோரும் சேர்ந்துதான் எடுத்திருக்கின்றார்கள். ஆகவே ஆறுக்கு மேற்பட்ட தொற்றாளர்கள் அன்றைய தினம் அடையாளம் காணப்பட்டனர் என்ற தகவல் அவர்களுக்கும் கட்டாயம் தெரிந்தே இருந்திருக்கும். இல்லை என்று மறுப்பது அபத்தத்திலும் அபத்தம்.

எனவே தொற்றாளர் எண்ணிக்கை பற்றிய விடயத்தை ஒளித்ததில் யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி மீது மட்டும் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை. வழமையாக செய்திகளுக்கு ‘மறுத்தான்கள்’ அடிக்கும் அதிகாரிகள் இந்த விடயத்தில் அதீத மௌனம் காத்துப் பம்முவது அற்பத்தனம். தொற்றாளர் எண்ணிக்கையை மறைப்பது குற்றம் என்று செயலணித் தலைவரே பகிரங்கமாகக் கூறிவிட்டார். ஆனால், தொற்றாளர் எண்ணிக்கை மறைக்கப்பட்டிருக்கின்றது – தவறுதலாக அல்ல – வேண்டுமென்றே என்ற சந்தேகத்தை ஊடகத் தரப்புகள் பகிரங்கமாகவும் தெளிவாகவும் கூறிவிட்டன; அம்பலப்படுத்தி விட்டன. இந்த விடயத்தில் யாழ். ஆஸ்பத்திரி மருத்துவப் பணிப்பாளர் , மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ் அரச அதிபர் ஆகியோர் தொடர்ந்து அமைதி காப்பார்களாயின் – ஊடகங்கள் மூலம் உண்மை நிலையை அம்பலப்படுத்த மறுப்பார்களாயின் – அது அவர்கள் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள் என்ற அர்த்தத்தையே தரும்.

எழுமாற்றாக நடந்த சோதனையில் மருதனார்மடம் சந்தையில ஒருவருக்குத் தொற்றிருப்பது குறித்த செய்தி வெளியாகி, முழுக் குடாநாடும் பரபரப்போடு விடயங்களை அறிய ஆவலோடும் எதிர்பார்ப்போடும் இருந்த வேளையில்தான் இந்த மூடிமறைப்பு – ஒளிவு, மறைவு – இடம் பெற்றிருக்கின்றது. இத்தகைய ஒளிப்பு வேலையினால. உண்மையான தொற்றாளிகள் தப்பிப் போகவும், சந்தேகத்துக்குள்ளானோரைத் தனிமைப்படுத்துவதில் பின்னடைவு ஏற்படவும் நேர்ந்ததா என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

இந்தச் சம்பவங்களின் பின்னால் பொதிந்து கிடக்கும் தந்திரம் யாது என்பதைக் கண்டுபிடிக்கத் தனியான ஒரு விசாரணைக் குழுவை வடக்கு மாகாண ஆளநரோ அல்லது செயலணியின் தலைவரான இராணுவத் தளபதியோ நியமித்தால் நல்லது. அப்போதுதான் உண்மை வெளியாகுமோ என்னவோ?

– மின்னல் –

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து நேர்மையாக – தீவிரமாக ஈடுபட வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அரச ஆதரவாளர்கள் – அரசியல்வாதிகள் உட்படத் தற்போது சிறைவாசம் அனுபவிக்கும் பலரை விடுவிக்கக் கோரி அரசதரப்பினரால் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை விடுவிப்பதற்கு வழி தேட வேண்டிய நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கின்றார்கள். அவர்களைச் சட்டபூர்வமாக விடுவிக்க முடியாது என்பதும், எல்லோரையும் பொது மன்னிப்பில் விடுவித்தால் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதும் தெரிந்த விடயம்.

இப்போது, போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புட்ட 607 கைதிகளைப் புனர்வாழ்வுக்கு அனுப்புவது பற்றியும், சிறுகுற்றங்கள் செய்து சிறையிலுள்ள 800 கைதிகளை விடுவிப்பதற்கும், தூக்குத் தண்டனைக் கைதிகளின் தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கும் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இப்படிப் பலர் விடுவிக்கப்படும்போது, அரச ஆதரவாளர்கள், அரசியல்வாதிகள் இத்தகைய காரணங்களைக் காட்டி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படும் சாத்தியங்கள் உண்டு. அதற்காகச் சில அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது அரசின் தேவையாகவும் இருக்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பதில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம். எனினும், ஒரு சில அரசியல் கைதிகளை மட்டும் விடுவிப்பது என்ற நிலையுடன் அந்த முயற்சி நின்று விடக் கூடாது என்பதுதான முக்கியமான விடயம். வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியாது என்ற காரணங்களை அரசு கற்பித்து, பலரின் விடுதலை தட்டிக்கழிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அதனால் சட்டமா அதிபர் வழக்குகளைத் திரும்பப் பெறுவதன் ஊடாக, அவர்களைப் பொது மன்னிப்புக்கு உரியவர்களாக்க முடியும் என்ற விடயம் வலியுறுத்தப்பட வேண்டும்.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் நேர்மையாகவும், தீவிரமாகவும் ஈடுபட வேண்டும் என்று கோருகின்றோம் – என்றுள்ளது.

## உடுவில், தெல்லிப்பழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் நேற்றிரவு அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 33 பாடசாலைகளும், தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 40 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன.

மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியின் பின் இந்த இரண்டு கல்விக் கோட்டப்பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, மருதனார்மடம் கொரோனாத் தொற்றுத் கொத்தணியின் முதலாவது நபரின் மகளுக்கு நேற்றுமுன்தினம் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா எண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டுமையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 36 என்று கொரோனாத் தடுப்புக்கான செயலணி நேற்று காலையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தனது முகநூலில் வெளியிட்ட பதிவில் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் 6 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கூறியிருந்தார். அத்துடன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் பதிவிட்டிருந்தார். இந்த எண்ணிக்கை குழப்பம் தொடர்பில் கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரான சவேந்திர சில்வாவிடம் கேட்டபோது,

அந்தந்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப் போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். அதிகாரிகளும் தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 36 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 6 பேர் மட்டுமே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டார்கள் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானது.

ஊடகங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஏன் குறைத்து தகவல் வழங்கினார்கள் என்பது தொடர்பில் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் கவனம் செலுத்தும்.

கொரோனா என்பது கொடிய நோய். இந்த விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகத்தினரும், சுகாதாரப் பிரிவினரும் மற்றும் பொதுமக்களும் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் நடக்க வேண்டும்.

பிறக்கின்ற புத்தாண்டு கொரோனா இல்லாத ஆண்டாகப் பிறக்க வேண்டும் என்பதே அனைவரினதும் பிரார்த்தனையாக இருக்க வேண்டும் – என்று பதிலளித்தார்.

## தொற்றாளர் எண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பான குழப்பம் மற்றும் அதனை அறிவிப்பது தொடர்பான குழப்பம் என்பன தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஒவ்வொரு வைத்தியசாலை நிர்வாகமும் தத்தமது வைத்தியசாலையில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அந்தந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும். குறித்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தத்தமது மாகாணங்களில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை சுகாதார அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். சுகாதார அமைச்சு, அனைத்து மாகாணங்களிலும் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கொரோனாத் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்துக்கும் அரச தகவல் திணைக்கள அலுவலகத்துக்கும் அறிவிக்கும். அதனடிப்படையில் ஒவ்வொரு இரவும் நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கையும் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். இதுதான் நடைமுறை. இந்த நடைமுறை வடக்கு மாகாணத்தில் மீறப்படுகின்றதா என்பது தொடர்பில் நாம் ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும் – என்றார்.

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாவின் மூன்றாவது அலையில் 139 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 152 ஆக அதிகரித்துள்ளது.

## கண்டி டிரினிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வளாகத்தில் தங்கியிருந்த 63 வயது பெண் ஒருவர் கொவிட் – 19 காரணமாக இறந்துவிட்டார். இதனாலேயே இவ் வளாகத்தில் உள்ள வீடுகளில் வசிப்பவர்கள் மீது பி.சி.ஆர். சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன். இதில் தற்போது பதின் மூன்று பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை பதிவாகியுள்ளது.

இதனால், இன்று முதல் டிரினிட்டி கல்லூரி திறக்கப்படாது எனவும் கண்டியில் இக் கல்லூரியோடு சேர்த்து மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நேற்றும் 655...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைரஸ் தொற்றியுள் ளது.

நாட்டில் மொத்தத் தொற்றா ளர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 790 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 23 ஆயிரத்து 793 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 848 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## உடுவில் ‘லொக்டவுண்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மருதனார்மடம் பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை தற்காலிமாக மூடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களது குடும்பத்தையும் அவர்களுடன் தொடர்புடையோரையும் வீடுகளில் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் முன்னெடுப்பார்கள்.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு மருத்துவ – சுகாதார சேவைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு முதல் முடக்கப்பட்டன.

குறித்த செயலகப் பிரிவில் 30 கிராம அலுவலகர் பிரிவுகளில் 28 பிரிவுகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இருக்கலாம் என்ற அடிப்படையில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதாரத் துறையினரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் உடுவில் பிரதேச செயலகப் பிரிவை விட தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் அதிக தொற்றாளர்கள் உள்ளமை கண்டறியப்பட்டது.

இதனால் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டம் நேற்றிரவு முதல் நீக்கப்பட்டு முடக்கநிலை விடுவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என 398 குடும்பங்கள் வீடுகளில் சுயதனிமைப் படுத்தப்படுகின்றனர்.

சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் எந்தவொரு காரணத்துக்காகவும் வீட்டை விட்டு வெளியேற முடியாது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கள் பல இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் வீட்டுத் தனிமைப்படுத்தல் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதனாலேயே எந்தவொரு பிரதேசமும் முடக்கப்படவில்லை.

சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொதுமக்கள் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை, வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் மற்றும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் – என்றார்.

(முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்...)

# மாகாணசபை முறைமையை ஒழித்து அதிகாரம் மத்தியிடம் வரவேண்டும்!

மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாதொழித்து, அந்த அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஊடாகவே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது என்பதாலேயே நான் ஆரம்பத்திலிருந்து அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றேன். 13 ஆவது திருத்தம் எம் மீது வலுகட்டாயமாகத் திணிக் கப்பட்டதொன்றாகும். ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து, பொதுமக்களைத் தாக்கி, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனியாக வரவழைத்துத்தான் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவால் எம் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே அவ்வாறு செய்யப்பட்டது.

ஆனால் உண்மையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் வலுவிழந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் இந்தியாவால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தல், விடுதலைப் புலிகளைத் தாக்குதல், வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துதல் போன்றவை இந்தியாவால் செய்யப்பட வேண்டும் என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவை எதனையும் இந்தியா செய்யவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக எமது தரப்பிலிருந்து சுமார் 29 ஆயிரம் பேர் மரணமடைந்தமையுடன் சுமார் 14 ஆயிரம் பேர் ஊனமுற்றமையால் இனி மேலும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமுல்படுத்தப்படக்கூடிய நிலையில் இல்லை என்பதே எனது நிலைப்பாடாகும். ஆகவே, அந்த ஒப்பந்தத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையும் எமக்குத் தேவையில்லை.

நாம் இலங்கையைத் தனியொரு நாடு என்றே கருதுகின்றோம். அத்தகைய நாட்டில் அனைவருக்கும் பொதுவான தனியொரு சட்டமே இருக்கவேண்டும். ஆனால் மாகாணசபை அமுலில் இருக்கும் பட்சத்தில் 9 மாகாணங்களுக்கும் வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் வெவ்வேறான சட்டங்களை உருவாக்கிக்கொள்ள முடியும். அவ்வாறெனின் இது 'ஒருமித்த நாடாக' இருக்காது. எமது நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களனைவரும் ஒரு குடும்பமாக இருக்கவேண்டும்.



அனைவரும் தமக்கு விரும்பிய இடங்களில் வசிப்பதற்கும் தாம் விரும்பிய தொழிலை செய்வதற்கும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

ஆகவே இந்த மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாதொழித்து, அந்த அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். - என்றார்.

## முல்லையில் நான்கு ஆண்டுகளில் பாரிய வெடிபொருள்கள் அகற்றல்

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பகாமம் மற்றும் தச்சடம்பன், கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை மற்றும் ஆனையிறவு ஆகிய பிரதேசங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் 15 லட்சத்து 36 ஆயிரத்து 965 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 24 ஆயிரத்து 893 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.



இலங்கையின் வட பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணி வெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2020 டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழுள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் மேற்படி வெடிபொருள்களை அகற்றியுள்ளன என ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் ஆனையிறவு பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## துபாயில் இயங்கும் போதைப்பொருள் கடத்தல் வலயமைப்புடன் தொடர்புடைய மூவர் கைது!

*துபாயிலிருந்து இயங்கும் போதைப்பொருள் கடத்தல் வலயமைப்புடன்தொடர்பிருப்பதாகச் சந்தேககிக்கப்படும் மூன்று நபர்கள் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*களனி குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு இணங்க மூன்று சந்தேக நபர்களும் சிலாபம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*தனிநபர்கள் பல்வேறு சட்ட விரோத வழிமுறைகள் மூலம் நாட்டுக்குள் போதைப்பொருள் கடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*மூவரின் வங்கிக் கணக்குகள் அடையாளம் காணப்பட்டன எனவும், சொத்துக்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.*

## சோதனைக்கு உட்படுத்தப்படாத மருந்தைப் பாவிக்க வேண்டாம்!

கொழும்பு, டிசெ.14

சோதனைக்குட்படுத்தப்படாத - கொவிட் தொற்று நோய்க்கான மருந்துகள் என கூறப்படுகின்றவற்றை - பயன்படுத்த வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையுடன் மூன்று மருந்துகள் சோதனை மட்டத்தில் இருக்கின்றன என தேசிய ஆராய்ச்சி மன்றம் தெரிவித்துள்ளது.

சோதனை மேற்கொள்ளப்படாத - கொரோனாவுக்கு எதிரான மருந்துகள் எனக் கூறப்படுபவற்றை உட்கொள்ளக் கூடாது எனவும், சோதனை மேற்கொள்ளப்படும் மருந்துகள் தொடர்பில் தேசிய ஆராய்ச்சி மன்றத்தால் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமெனவும் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஹேமந்த தொடம்பஹால தெரிவித்துள்ளார்.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆயுர்வேத பாணி மருந்து சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்படவில்லை. அத்துடன் பாணி மருந்தைத் தயாரித்த தம்மிக்க பண்டார ஓர் ஆயுர்வேத பயிற்சியாளராக பதிவு செய்யப்பட்டவரல்லர் என ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் கே.டி.சி.எஸ்.குமாரதுங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# UNIVERSITY OF JAFFNA

FACULTY OF AGRICULTURE

ADMISSION OF PUBLIC OFFICERS

FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE

(2019/2020)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2019/2020

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be recognized by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (of not less than 2 years duration) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining the Diploma in Agriculture.

**Age:** Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Deputy Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar and envelope not less than 9"x 4" size (with stamp for Rs. 5.00).

**Closing date is 31st December 2020**

No application will be entertained after the closing date of application.

Applications should be forwarded through the relevant Heads of Department to Deputy Registrar, Admission Branch University of Jaffna, Thirunelvely or Assistant Registrar, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi. Applications which are not routed through the official channel will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

**REGISTRAR**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதத்தின் பிதற்றல்

**இதுவரை உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக மட்டும் இருந்த சமயம் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் நடவடிக்கை, அதில் இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்புப் போன்றவற்றைத் தொடர்ந்து பகிரங்க வெளியில் மோசமாக விமர்சித்து வந்த முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகரா, அதனால் என்னவோ குறுகிய காலத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பதவி உயர்வு பெற்றார். அதுவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற பாதுகாப்புத் தொடர்பான தரநிலை உயர்வுடன் அவர் அதனைப் பெற்றுக் கொண்டார். இந்த அமைச்சர் அந்தஸ்து உயர்வுடன் அவரின் கீழ் நாட்டில் பொலிஸ் துறை வந்தமை குறிப்பிடத்தக்கது.**

**இராணுவச் சிந்தனைப் போக்கில் தீவிர நிலைப்பாட்டைக் காட்டி வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பையே இராணுவ மயமாக்கி வருகின்றார் என்பது வெளிப்படையாகத் தோற்றும் விடயம்.**

**அந்த வகையில் அடங்கும் ஒன்றே முன்னாள் கடற்படை அதிகாரியை பொலிஸ் துறையையும் உள்ளடக்கிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமித்தமை.**

**அத்தகைய நியமனத்தைப் பெற்ற சரத் வீரசேகரா பேரினவாத இனவெறிப் பிதற்றலைத் தொடர்ந்து வெளிப்படையாகக் கக்கி வருகின்றார். தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதை இனவாதப் போக்கில் எதிர்க்கின்றார். அந்த அதிகாரப் பகிர்வுக்குப் பரிவாகச் செயற்படுவதால் இந்தியாவை இந்த நாட்டின் மீதான ஆக்கிரமிப்புப் பூதமாகக் காட்ட விழைகின்றார்.**

**அதிகாரப் பகிர்வு மூலம் உலகநாடுகள் பலவற்றிலும் செழுமையான ஆட்சி முறைகளும், அமைதியான வாழ்வும், சமாதானமான சூழலும் நிலவுகின்றமை குறித்து அடிப்படை அறிவு கூட பெறாதவர் போல அவர் உளறுகின்றார். பௌத்த, சிங்களப் பேரினவாத இனவெறி அவர் கண்ணை மறைத்து, உலகநியதிகளை அறிய வொண்ணாதவராகப் பேச வைக்கின்றது.**

***“நாட்டில் அனைவருக்கும் பொதுவான தனியொரு சட்டம் இருக்க வேண்டும். ஆனால் மாகாண சபை முறைமை அமுலில் இருக்கும் பட்சத்தில் ஒன்பது மாகாணங்களும் வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் வெவ்வேறான சட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வாறெனில இது ‘ஒருமித்த நாடாக’இருக்காது”*** **– என்று புதிய அரசியல் வியாக்கியானம் கூறியிருக்கின்றார் அமைச்சர் வீரசேகரா.**

**உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்கா பற்றி அறியாதவராகப் பேசுகின்றார் அவர்.**

**ஐம்பது சமஷ்டிப் பிரதேசங்களையும், ஒரு சமஷ்டி மாவட்டத்தையும் [வொஷிங்டன் டி.ஸி.], ஓர் இணைக்கப்பட்ட பிராந்தியத்தையும் கொண்டு அமைந்ததுதான் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு. ஒவ்வொரு சமஷ்டியிலும், ஒவ்வொரு விதமான சட்டங்கள், வேறு வேறான ஒழுங்கு விதிகள், மாறுபாடான வழக்காறுகள், வித்தியாசமான நடைமுறைகள். ஆனால் அவர்கள் உலகின் மிக சக்தி வாய்ந்த நாடாக ‘ஒருமித்து’ எழவில்லையா?**

**இன்னும் கொஞ்சம் விளக்கமாக நோக்கினால், உலகின் வல்லரசாக அது கம்பீரமாக எழுந்து நிற்பதே இப்படி அவரவர் தனித்துவங்களை மதித்து, அதற்கு இடமளித்து, முரண்பாட்டில் ஒன்றுபட்டு இணைப்பு காணும் உயர்ந்த பண்பினால்தான் என்பது புலனாகும்.**

**பௌத்த, சிங்கள இனவெறியர்கள் இலங்கைத் தீவின் மாற்று இனத்தவர்களை பேரினவாத மேலாண்மைத் திமிரில் அடக்கி ஒடுக்குவது போல, அமெரிக்காவிலும் பெரிய பிராந்தியங்கள் மற்றையவற்றை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, அதிகாரத் திமிரில் நடக்க முற்பட்டிருந்தால், இலங்கை போன்று தோற்றுப் போன நாடாகவே அமெரிக்காவும் இன்று விளங்கியிருக்கும்.**

**இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைத் தூக்கிக் கடாச வேண்டும் என்றும் –**

**அது இலங்கை மீது பலவந்தமாக இந்தியாவினால் திணிக்கப்பட்டது என்றும் –**

**அதன் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் –**

**இப்போது பிதற்றுகின்றார் அமைச்சர் சரத் வீரசேகரா.**

**ஜனாதிபதி கோட்டாபயவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக மேல் நிலைமை வழங்கப்பட்டிருக்கும் அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் தொடர்ந்து இப்படி இந்திய விரோதக் காழ்ப்புணர்வைப் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றமை குறித்து புதுடில்லி விசேட கவனமும், சிரத்தையும் எடுக்க வேண்டும்.**

**இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு அதன் கீழ் இந்திய அமைதிப்படைகள் இலங்கையின் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டு, விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்து, இரண்டரை ஆண்டுகளின் பின்னர் அப்போதைய இலங்கை ஜனாதிபதி வேண்டியதன் பேரிலேயே இலங்கையை விட்டுப் புறப்பட்டன. அதன் பின்னரே வடக்கிலிருந்து முஸ்லிம்களின் இடப்பெயர்வு இடம் பெற்றது. அப்படி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களையும் மீளக்குடியமர்த்தும் பொறுப்பை இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் இந்தியா ஏற்றிருந்தது என்ற சாரப்படவும் கூறுகின்றார் சரத் வீரசேகரா. மொத்தத்தில் அவரின் கருத்து சிங்களப் பேரினவாதத்தின் பிதற்றலின்றி வேறில்லை.**

# வான்பரப்பில் இன்றும் நாளையும் தென்படும் எரிகற்களின் வீழ்ச்சி



இலங்கை மக்களால் நேற்றும் இன்றும் இரண்டு நாள்களுக்கு எரிகற்கள் மழை வீழ்ச்சியை தெளிவாகப் பார்வையிட முடியும் என ஆதர் சி கிளார்க் நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கை வான்பரப்பில் நேற்றும் (ஞாயிற்றுக்கிழமையும்) இன்றும் எரிகற்கள் மழைவீழ்ச்சியைப் பார்க்க முடியுமென அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு 9 மணிக்குப் பின்னர் கிழக்கு வானிலும் நள்ளிரவில் தலைக்கு மேலான வான்பரப்பிலும் அதிகாலைப் பொழுதில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் மேற்கு வானிலும் இதனை தெளிவாக காண முடியும் என அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த எரிகற்கள் நேரடியாக பூமியில் விழாது என்றும் அதனால் ஆபத்துகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை மணிக்கு 130 எரிகற்கள் அளவில் வீழ்வது இலங்கை வான்பரப்பில் தெளிவாக காட்சியளிக்கும் என்பதோடு, இவை பல வண்ணங்களில் பயணிக்கும் என்பதாலும் இதற்கு ‘ஜெமினிட்ஸ் எரிகல்வீழ்ச்சி’ என்று பெயரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரங்கள் விட்டுச்சென்ற துகள்களின் வழியே புவி பயணிக்கும் போது இந்த காட்சிகள் தென்படும் என்றும் எரிகற்களானது மணித்தியாலத்துக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் விழும் எனவும் அந்த நிறுவகம் குறிப்பிடப்படுகிறது.

## அக்கரைப்பற்று கொத்தணி தொற்று 400 ஆக அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 14

கிழக்கு மாகாணத்தில் உருவாகியுள்ள அக்கரைப்பற்று கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 400 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று வரையான தொற்று நிலவரத்தின் படி அக்கரைப்பற்றில் 241 பேருக்கும், அட்டாளைச் சேனையில் 49 பேருக்கும், ஆலையடி வேம்பில் 16 பேருக்கும், சாய்ந்தமருதுவில் 17 பேருக்கும், திருக்கோவிலில் 9 பேருக்கும், பொத்துவிலில் 9 பேருக்கும், கல்முனை தெற்கில் 9 பேருக்கும், கல்முனை வடக்கில் 6 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சம்மாந்துறையில் 7 பேருக்கும், இறக்காமத்தில் 11 பேருக்கும், காரைதீவில் 2 பேருக்கும், நாவிதன்வெளியில் 2 பேருக்கும், நிந்தவூரில் 2 பேருக்கும், அம்பாறையில் 4 பேருக்கும், உஹனவில் 5 பேருக்கும், தமணவில் 4 பேருக்கும், பதியத்தலாவ 3 பேருக்கும், தெஹியத்தகண்டியவில் 3 பேருக்கும், மகாஓயாவில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 97 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 18 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# விரைவில் ‘மெகா’ கூட்டணி; ஐ.தே.கவும் இணையலாம்!

### மனோ அதிரடி அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 14

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பாரிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படும். அதில் வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சி இணையலாம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.) கூட்டணியாக முதலில் உருவாக்கப்பட்டது.

தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, சஜித் வசமாகும் என்ற எதிர்பார்ப்பை, ரணில் மீண்டும் தவிடுபொடி ஆக்கியதால், ஐ.தே.கவை மீண்டும் மறுசீரமைக்கும் எண்ணம் இப்போது கைவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தனிக்கட்சியாக வளர்தெடுக்கப்படும். அதையடுத்து ஐக்கிய மக்கள் கூட்டணி உருவாக்கப்படும். அதில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட பங்காளிக் கட்சிகள் இணைந்து பாரிய எதிரணி கூட்டணியாக அது உருவாக்கப்படும். இதில் ஒரு பங்காளியாக ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால் இணையலாம்.

இந்தப் பொது நோக்கில் இன்று சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, குமார வெல்கம போன்றோர் ஐக்கிய மக்கள் சக்தியில் நேரடியாக இணைந்து, எமது கூட்டணியின் பிரதான கட்சியான அதைப் பலப்படுத்துகின்றார்கள். பாரிய எதிரணி கூட்டணியை உருவாக்கும் இந்த நடவடிக்கைகளை நாம் ஆதரிப்போம் என்றுள்ளது.

# பண்டிகைக் காலத்திலும் நாடு முடக்கப்படமாட்டாது!



இலங்கையில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மேலும் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்து, பிரதேசங்களை தனிமைப்படுத்தவோ, ஊரடங்கு உத்தரவை அமுலாக்கவோ தேவை ஏற்படாது என கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 51 நாள்களாக முடக்கப்பட்டிருந்த சில வீடமைப்புத் திட்டங்களில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நீக்கப்பட்ட ஆறு வீடமைப்புத் தொகுதிகள் சார்ந்த பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது.

அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறுகளுக்கு அமைய எதிர்காலத்தில் அவற்றையும் நீக்குவது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு விவகாரம்: ஜனாதிபதி, பிரதமர் முரண்பட்ட கருத்துகள்!

## மின்சாரத்துறை வல்லுநர்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தையும், மின்சார சபை சட்டத்தையும் துரித கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவான விதத்தில் திருத்தி அமைப்பதற்கு முன்மொழிவதாக 2021 வரவு - செலவுத் திட்ட உரையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். எனினும் அந்த முன்மொழிவை புறக்கணிக்கும் வகையில் ஜனாதிபதி செயலாளர் ஜனாதிபதியின் ஆலோசனையுடன் ஆணைக்குழுவை மூடுவதற்குரிய தன்னிச்சையான தீர்மானத்தை தெரிவித்திருக்கின்றமை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் முரண்பட்ட கருத்துக்களைக் காண்பிக்கின்றன என மின்சாரத் துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் மின்சார துறையில் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் தொழிநுட்பம் ஆகிய விடயங்களை மையமாக கொண்டு மேற்கொண்டு வருகின்ற சுயாதீன ஆணைக்குழுவாக இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு இருக்கிறது. இந்த குழுவை மூடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலாளரால் திறைசேரியின் செயலாளருக்குக் கடந்த முதலாம் திகதியிட்டு எழுதப்பட்ட கடிதமொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

அதனைத் தொடர்ந்து, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைகுழுவின் உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு திறைசேரியின் செயலாளரால் தொலைபேசியினூடாகத் தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய அன்றைய தினமே இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தங்களது இராஜினாமாக் கடிதங்களை அமைச்சுக்கு அனுப்பிவைத்தனர் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த விடயத்தை இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைகுழுவின் பேச்சாளரும் உறுதிப்படுத்தினார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஐவருக்குப் பதிலாக ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்களை நியமிக்கவேண்டிய பொறுப்பு அமைச்சருக்கே உண்டு. இது தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 35 ஆவது இலக்க இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைகுழுச் சட்டத்தில் 1 (1), 3 (1) 4, 6 (1), 6 (4), ஆகிய பிரிவுகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன.

அந்த வகையில் தற்போது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிதியமைச்சின் கீழ் இருக்கின்ற நிலையில் அமைச்சுக்குப் பொறுப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆணைக்குழு உறுப்பினர்களை அரசமைப்பு பேரவையின் ஒருமைப்பாட்டுடன் நியமிக்க வேண்டியவராக உள்ளார். குறித்த வெற்றிடங்களைச் சமர்ப்பித்து ஒரு மாத காலத்துக்குள் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். - என்றுள்ளது.

# கொரோனா இன்னமும் கட்டுப்படுத்தப்படவில்லை பண்டிகைகளை வீடுகளிலேயே கொண்டாடுங்கள்!

## மக்களுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தல்



மக்களனைவரும் பண்டிகைகளை தமது குடும்பத்தாருடன் வீடுகளிலேயே கொண்டாட வேண்டும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

இந்த மாதம் பண்டிகை காலம் என்ற போதிலும் கொவிட் அச்சுறுத்தலை கவனத்தில் கொண்டு பண்டிகைக்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்ய செல்லும் போதும், கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்யும் போதும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும். எனினும் வைரஸ் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாதமையால் பொதுமக்கள் அனைவரும் அவரவர் இல்லங்களிலேயே சுகாதார விதிகளை கடைப்பிடித்து பண்டிகைகளைக் கொண்டாடுகின்றமை பாதுகாப்பானது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை தொடர்பில் 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த சோதனை நடவடிக்கைகளுக்கமைய இதுவரையில் ஆயிரத்து 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ரயில்வே திணைக்கள சேவையில் 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள்!




ரயில்வேத் திணைக்கள சேவையில் 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றில் ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் மாத்திரம் 366 வெற்றிடங்கள் காணப்படுகின்றனஎனரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர சுட்டிக்காட்டியுள்ளார்.

ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

ரயில்வே சேவையில் காணப்படும் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண ரயில்வேத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கவில்லை. ரயில்வேத் திணைக்களத்தில் தற்போது 23 ஆயிரம் பேர் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். இருப்பினும் 8 ஆயிரம் சேவை பிரிவுகளுக்கு இன்னும் வெற்றிடம் நிலவுகிறது.

இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். படித்த இளைஞர்களை ரயில்வே சேவையில் இணைத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகளை ரயில்வேத் திணைக்களம் இதுவரை முன்னெடுக்கவில்லை.

ரயில்வேத் திணைக்களத்தில் 9 சேவை பிரிவுகள் காணப்படுகின்றன. ரயில்வே உப போக்குவரத்து திணைக்கள சேவையில் 3 ஆயிரம் வெற்றிடங்களும், ரயில்வே நிலைய தூய்மைப்படுத்தல் சேவை பிரிவில் 320 வெற்றிடங்களும், ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் 366 வெற்றிடங்களும் நிலவுகின்றன. இவ்வாறாக ரயில்வே சேவை வழங்கும் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் உள்ளன.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை ரயில்வே சேவையில் முழுமையாக செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. குறைவான சேவையாளர்களைக் கொண்டு ரயில்வே சேவையை வினைத்திறனாக முன்னெடுக்க பல தடைகள் காணப்படுகின்றன. ரயில்வே சேவையில் படித்த இளைஞர்களை விரைவில் இணைத்துக் கொள்ள ரயில்வேத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். - என்று தெரிவித்தார்.

# திருநெல்வேலி பொதுச் சந்தையில் 39 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை!

யாழ்ப்பாணத்தில் பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலி பொதுச் சந்தையில் 39 பேரிடம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய எழுமாறாக 39 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

மருதனார்மடம் பொதுச் சந்தையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் கொத்தணி ஏற்பட்டுள்ள நிலையில் திருநெல்வேலி சந்தையில் உள்ள வியாபாரிகள் உள்ளிட்ட 39 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

இந்த மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# பொலிஸாருக்கான இடமாற்றம் ஜனவரி முதல் நடைமுறைக்கு!

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் ஜனவரி முதல் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சாதாரண தரப் பரீட்சை முடிவடையும் வரையில் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

இவர்களுக்கு மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னரே இடமாற்றம் வழங்கப்படும். பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர ஏனையவர்களுக்கு வழமையை போன்றே இடமாற்றம் வழங்கப்படும்.

# தனிமைப்படுத்தல் மீறுவோர் தேசத் துரோகிகள் ஆவராம்

## இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் செயல் தேசத் துரோகத்தனமாகவே கருதப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்கள் மீது எவ்வித கருணையும் காட்டப்படாது என்றும் அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அதனை மீறுவோர் நாட்டினால் துரோகிகளாகவே கருதப்படும் வாய்ப்பு இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இவர்களுக்கு எதிராக மூன்று வருடங்கள் வரை சிறை தண்டனையும் அதே போன்று அபராதமும் விதிப்பதற்கு சட்ட நடைமுறை இருப்பதாகவும் அஜித் றோஹண குறிப்பிட்டிருக்கிறார்.

# இலங்கையிலும் பரவ ஆரம்பம் மற்றுமோர் ஆபத்தான தொற்று!

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு மத்தியில் 'லீஷ்மேனியாசிஸ்' எனும் ஆபத்தான நோய்த்தொற்று பரவி வருகிறது.

இந்தத் தொற்றுக்கு ஆளான நோயாளிகள் அநுராதபுர மாவட்டத்திலுள்ள பதவியா, நாச்சதுவா, தலாவ, தம்புத்தேகம, நொச்சியாகம மற்றும் இபலோகம பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ளனர்.

லீஷ்மேனியாசிஸ் என்பது உலகின் 9 ஆவது மிக ஆபத்தான தொற்று நோயாகும். 97 நாடுகளில் இந்தத் தொற்று நோய் பரவியுள்ளது எனக்கூறப்படுகிறது.

இந்த நோய் மணல் பூச்சி மூலம் பரவுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டவரை மணற் பூச்சி கடித்துவிட்டு, ஆரோக்கியமான இன்னொருவரை அது கடிக்கும்போது இந்த நோய் எளிதாகப் பரவுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

அன்ரன் பாலசிங்கம்

விடுதலைப் புலிகளின் மதியுரைஞராக விளங்கிய 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் பதினான்காவது நினைவுதினம் இன்றாகும். அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் சித்தாந்தத்தை வகுத்த வழிகாட்டி மட்டுமல்லர். ஒரு சிந்தனைச் சிற்பி. தத்துவாசிரியர்.

இடதுசாரித் தத்துவங்களில் இருந்து மனித வரலாறு வரை பல விடயங்களில் முத்திரை பதிக்கும் கருத்துருவங்கள் அவர் சிந்தனையில் தோற்றம் பெற்று எழுத்துருவம் பெற்றிருக்கின்றன. மனித வாழ்வு, மனித வராலறு, மனித விடுதலை போன்றவை குறித்து புதுமையான, புரட்சிகரமான, நுண்ணிய, திண்ணிய கருத்துக்களைத் தன் ஆழ்மன தரிசனங்கள் மூலம் கண்டு, அழகு தமிழ்ச் சொல்லாடல்களுடன் தந்தவர் அவர். அதில் ஒன்று அவரின் நினைவுதினமாக இன்று இங்கு பிரசுரமாகின்றது.

– ஆசிரியர் –

நாம் வாழும் இந்த உலகத்தைப் பல உலகங்களாக வகைப்படுத்தலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக எங்கும் வியாபித்து நிற்கும் பேருலகம். ஒன்பது கிரகங்களில் ஒரு கிரகமாக, சூரியன் என்ற நட்சத்திரத்தை சுற்றி உலா வரும் பூவுலகம். மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம். மூளைய நரம்பு மண்டலமாக மண்டையின் ஓட்டுக்குள் மறைந்திருந்து செயற்படும் மனவுலகம். இப்படியாக பல உலகங்களுக்குள் எமது வாழ்க்கை ஓடுகிறது. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே என் இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப் பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக் குவியல்களைக் கொண்ட உலகம். பல வகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டுமொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகமெனக் குறிப்பிடுகிறேன்.

கருத்துக்கள் என்றால் மனிதர்களின் மனக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துக்களுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப்பெடுக்கின்றன. அவை மனிதர்களைப் பற்றிக் கொள்கின்றன. கருத்துக்களுக்கு அபார சக்தியுண்டு. அவை மனிதர்களைப் பற்றிக் கொண்டு அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியுடையனவாக இயங்குகின்றன.

அது ஒரு பொது நூலகம். நகரப் புறத்தில் ஓர் அழகிய பூங்காவிற்கு அண்மையில், அமைதியான சூழலில் அமையப்பெற்றிருக்கிறது. அதனுள் ஆயிரமாயிரம் நூல்கள் நேர்த்தியாக, ஒழுங்கு வரிசையாக, அலமாரிகளிலும் நிலையடுக்குகளிலும் அவை அடுக்கப்பட்டிருந்தன. இலக்கியம், தத்துவம், சட்டம், அரசியல், சமூகவியல், இறையி யல் என்ற ரீதியில் பல துறை சார்ந்த பல்லாயிரம் புத்தகங்கள். ஒரு பிரமாண்டமான கருத்துலகத்தின் பொருளியத் தோற்றப்பாடாக அந்நூலகம் விளங்கியது.



அந்த நூல்கள் அனைத்துமே உயிரற்ற சடப்பொருள்களாக, வெறும் அச்சிடப்பட்ட கடுதாசிப் பண்டங்களாகக் காட்சி தந்தபோதும், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு அதிசயமான இறவாப்பொருள் ஒளிந்துகிடந்தது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருந்தது. அந்தப் படைப்பாளி மரணித்து பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம். அல்லது பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கலாம். ஆயினும் அப்படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக் கள், கோட்பாடுகள், அவன் ஆய்வு செய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புகள், வாழ்வனுபவத்திலிருந்து அவன் பெற்ற தரிசனங்கள் எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியாக, காலத் தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அங்கு இருப்புக் கொண்டு இருந்தது.



தினமும் அந்த நூலகத்திற்குப் பல வாசகர்கள் வருவார்கள். அவரவருக்குப் பிடித்தமான துறைகளில், அவரவருக்குப் பிடித்தமான நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிப்பார்கள். வாசிப்பில், வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கும் மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ் கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கிறது. படைப்பாளியின் எழுத்துலகில், அவனது கருத்துலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன், படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான். ஒரு விசாரணையை நடத்துகிறான். அந்தத் தேடுதலில், அந்த விசாரணையில், படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக் கொள்கிறது. கருத்துக்கள் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை நிகழ்கிறது.



அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன் னர், இந்தப் பூமியில் ஒரு கருத்துப் பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மனிதர்களை அது ஆழமாகப் பற்றிக் கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, பாறைகளைத் தகர்த்து, கலைவடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்துக்கு மனிதன் விளக்கங்களைக் கொடுத்தான். வியாக்கியானங்கள் அளித்தான். அர்த்தங்களைக் குவித்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரிகைகள், சடங்குகள் தோன்றினெ. நிறுவனங்கள், நிர்வாக பீடங்கள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக் கருத்திலிருந்து இப்பூவுலகில் பல நாகரீகங்கள் தோன்றின. கிறீஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பௌத்த நாகரீகங்களாக மானிடம் பிளவுபட்டது. போர்கள் நிகழ்ந்தன. நாடுகளும் இனங்களும் மோதின. பூமியில் இரத்த ஆறுகள் ஓடின. அந்தக் கருத்து மனிதர்களை ஆழமாகப் பற்றிப் பிடித்து அவர்களை ஆட்டிப்படைத்தது.

கருத்துலகம் மனிதர்களை இயந்திரமாக இயக்குகின்றது. மனிதர்களின் நம் பிக்கைகளுக்கும் அவர்களது சமூக செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை ஆட்கொண்டு விடுகிறது. நாம் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டி விடுகிறது. விவர மறியாத பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்து விடுகிறது.

நாம் பிறந்த கணத்திலிருந்து எமக்கொரு பெயர் என்றும், எமக்கொரு சாதி என்றும், எமக்கொரு மதம் என்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக் குறிகள் சுடுகாடு வரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோவில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகிய நண்பர்கள், நாம் வரித்துக் கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட உறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக் கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடு கொள்கின்றன. எம் மீது திணிக் கப்பட்டதும் நாமாகப் பற்றிக் கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக் கொண்டு எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் கருத்துக்களால் வனையப்பெற்ற சமூகப் பொம்மைகள். (07ஆம் பக்கம் பார்க்க)

# கருத்துலகமும் வாழ்வியக்கமும் ...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலில் அந்தச் சடங்கு நடக்கிறது. குருவானவர் பூசை செய்கிறார். அப்பத்தையும் முந்திரிப் பழச்சாறுடைய கிண்ணத்தையும் உயர்த்திப் பிடித்தவாறு செபிக்கிறார். சிலுவையில் நிகழ்ந்த கடவுளின் மரணம் குறியீட்டுச் சடங்காக மேடையேறுகிறது. அவன் முழங்காலிட்டபடி தலைகுனிந்து, கைகூப்பியவாறு வணங்குகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை ஆட்கொண்டு இயக்கியது. அன்று காலை, ஒரு மணி நேரமாக அவனும் அவனுடன் சேர்ந்து மற்றவர்களுமாக அந்த மத பண்பாட்டுச் சடங்கில் பங்கு கொண்டனர்.

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவு முறைகள் எல்லாமாக அவனது சமூகச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்து விடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாகத் தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்குகொள்ளவும் கருத்துலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும், சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக விளங்குகின்றது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு துணை உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஓர் அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம், கோவில், கட்சி, ஊடகம் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. குடும்பம் மொழியைக் கற்றுக் கொடுக்கிறது. பேசும் ஆற்றலைப் பெற்றுக் கொடுக்கிறது. எழுத்தறிவைப் பெற்றுக் கொடுக்கிறது பாடசாலை. பல்வேறு கலைகளையும் புலமைகளையும் பயிற்றுவித்து அறிவாற்றலை வளர்த்து விடுகிறது பல்கலைக்கழகம்.



அடுத்த உலகம் பற்றியும், அழியாத ஆன்மா பற்றியும், எல்லாம் வல்ல இறைசக்தி பற்றியும் போதனை செய்கிறது மதம். கருத்துப் பரப்புரை செய்கிறது கட்சி. தகவல்களைத் தந்து கருத்துகளை விதைக்கிறது ஊடகம். பேசும் மொழியாக, எழுத்தாக, பாடங்களாக, போதனைகளாக, பிரசங்கமாக, பிரச்சாரமாக, செய்தியாக, தகவலாக பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களாக, பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக, கருத்து உற்பத்தியும் கருத்துத் திணிப்பும் நிகழ்கின்றன. நாம் பிறந்த கணத்திலிருந்தே எமது மனதின் நினைவுப் பசுமையில் கோடானு கோடி கருத்துருவங்கள் தைக்கப்படுகின்றன. நாம் விசாரணை செய்யாது விழுங்கிக் கொள்ளும் கருத்துக்களிலிருந்தும் நாம் விரும்பிப் பற்றிக் கொள்ளும் எண்ணங்களிலிருந்தும் அவற்றின் தன்மைகளிலிருந்தும் எமது சுயம் வளர்கிறது; எமது ஆளுமை வளையப் பெறுகிறது; எமது சிந்தனையும் செயற்பாடும் சீவியமும் அமைந்து விடுகின்றன.

கருத்துக்களைப் படைத்து, அந்தக் கருத்துக்களை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டிவளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூகக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இன்றைய நவயுகத்தில் ஊடகங்களே பிரதான கருத்து உற்பத்தி நிறுவனமாகக் கொள்ளப்படுகின்றன. மனிதர்கள் மீது கருத்தாதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்குக் கருத்துத் திணிப்பு அவசியம் என்பதால் உலகத்திலுள்ள பல அரசுகளும் அதிகார வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களாக ஊடகங்களைத் தமது அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன. கருத்துக்களை மக்கள் மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்களின் மனவரங்கில் ஒரு பொய்யான, போலியான சிந்தனையுலகைச் சிருஷ்டித்து, கருத்தாதிக்கம் மூலம் தமது ஆட்சியை வலுப்படுத்தி நிலைப்படுத்த முனைகின்றன. இந்த வகையில், கருத்துருவாக்கமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் அடக்குமுறை வடிவமாகும்.



சமூகச் சிந்தனை உலகை மாற்றியமைக்கும் வகையில் கருத்துருவாக்கம் செய்வது ஒரு கலை. மிகவும் நுட்பமான ஒருகலை. மெய்மையைத் திரிவுபடுத்தி, பொய்மையை மெய்மையாகக் காட்டும் ஒரு சூட்சுமமான கலை. படித்தவர்களும் சரி, பாமர மக்களும் சரி, இந்தக் கண்கட்டு வித்தையை இலகுவில் கண்டு கொள்ள முடியாது. இன்றைய உலகில் இந்தக் கருத்துருவாக்கக் கலை ஒரு பெரும் வர்த்தகமாக வளர்ந்து வருகிறது. இந்தக் கருத்துருவாக்க கலையில், அதன் வர்த்தக ரீதியான வளர்ச்சியில் அமெரிக்க ஊடகங்கள் உலகில் முன்னணி வகிக்கின்றன. அமெரிக்க ஊடக உரிமையாளர்கள் பெரும் முதலாளித்துவ முதலைகள். பெரும் செல்வந்தர்கள். இந்த ஊடகச் சொந்தக்காரர்களான வர்த்தகர்களுக்கும் அதிகார ஆதிக்கம் பெற்ற அரசியல்வாதிகளுக்கும் மத்தியில் ஒரு நெருங்கிய உறவுண்டு. இந்த உறவின் அடிப்படையில், பரஸ்பர நலன் பேணும் நோக்கில், ஊடகங்கள் ஆட்சியதிகாரத்திற்கு முண்டு கொடுத்து நிற்கின்றன. ஆட்சியாளரின் அநீதிகளை நியாயப்படுத்தி வருகின்றன.

சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அடிப்படையான மனித சுதந்திரம், சனநாயக சுதந்திரம் என்ற ரீதியில் சுதந்திர விழுமியத்தின் உன்னதத்தை உலகிற்குப் போதித்து வருகிறது அமெரிக்கா. சுதந்திரம் என்ற இக்கருத்துருவத்தின் தோற்றப்பாட்டிற்கு அப்பால், அந்தப் பொய்யான முகமூடிக்கு அப்பால், காலம் காலமாக அமெரிக்க அரசு புரிந்து வந்த அநீதிகளையும், அதனை நியாயப்படுத்த அமெரிக்க ஊடகங்கள் கையாண்ட யுக்திகளையும் தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியபெருமை அமெரிக்கப் பேரறிஞரான நோம் சொம்ஸிசைச் சாரும். அமெரிக்காவின் சனநாயக முகமூடியை கிளித்தெறிகிறார் சொம்ஸி. சுதந்திரம் என்றும் மனித உரிமை என்றும் அமெரிக்க அரசியலுலகில் பேசப்படுவது எல்லாமே அர்த்தமற்ற சொல்லாடல்கள். நடைமுறை நிதர்சனத்திற்கு மாறான வார்த்தைப் பிரயோகங்கள். 'சுதந்திர உலகம்' என்ற ஒரு போலியான கருத்துருவத் திரைக்குப் பின்னால் மறைந்து நின்று, மற்றைய நாடுகளதும் சமூகங்களதும் சுதந்திரங்களை நசுக்கி வருவதாக அமெரிக்கா மீது குற்றம் சுமத்துகிறார் சொம்ஸ்கி. சுதந்திர நாடுகள் மீது படையெடுப்பது, ஆக்கிரமிப்பது, மக்களின் ஆதரவுடைய ஆட்சியைக் கவிழ்ப்பது, ஆட்சி மாற்றங்களை அரங்கேற்றுவது, சர்வாதிகார ஆட்சிகளுக்கு முண்டுகொடுப்பது, பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பது, இனவாத அரசுகளுக்கு ஆயுத உதவி வழங்குவது, மனித இனத்தை அழிக்கவல்ல அணுவாயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பது – இவ்விதமான அட்டூழியங்களை அமெரிக்க அரசு புரிந்து வர அதனையெல்லாம் சுதந்திரத்தின் பெயரால் நியாயப்படுத்தி வருகின்றன அமெரிக்க கருத்துருவாக்க நிறுவனங்களான ஊடகங்கள். இப்படியாக, அமெரிக்க அரசின் அசிங்கமான உண்மை முகத்தை அம்பலப்படுத்துகிறார் சொம்ஸ்கி. எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்து நிற்கின்றன.

அன்றொரு காலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமியில் தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்திய போது ஆயுத வன்முறையை மட்டும் அவை பாவிக்கவில்லை. கருத்து ஆதிக்கத்தையும் ஓர் அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. முதலில் தமது மொழியைத் திணித்தார்கள். தமது மொழியைப் பயின்றவர்களுக்குக் காலனித்துவ நிர்வாகத்தில் வேலை வாய்ப்பு அளித்தார்கள். அடுத்ததாக, தமது மதத்தைப் பரப்பினார்கள். தமது மொழியைப் பயின்று, தமது மதத்தையும் தழுவிக் கொண்ட சுதேசிய மக்களுக்கு எல்லாச் சலுகைகளையும் வழங்கினார்கள். பின்னர் தமது அரசியல் ஆட்சிமுறைக் கோட்பாடுகளைத் திணித்தார்கள். இறுதியாக, மேற்கத்தைய தார்மீக தத்துவங்களைப் பரப்பினார்கள். மேற்கத்தைய தார்மீக விழுமியங்களின் மகத்துவத்தைப் போதித்தார்கள். இப்படியாக மேற்குலக காலனித்துவ வாதிகளின் மதம், மொழி, அரசியல், தார்மீகம் என்ற ரீதியில் அந்நியப் பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள் மீது திணிக்கப்பட்டன. காலனித்துவமானது தான் ஆக்கிரமித்த நாடுகளின் நிலத்தையும், வளங்களையும் சுரண்டுவதுடன் நின்றுவிடவில்லை. கருத்தாதிக்கத்தைத் திணித்து சுதேசிய மக்களின் மனவுலகத்தையும் அது ஆக்கிரமிக்க முயன்றது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களைச் சிறை கொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கின்றார்கள். மனிதர்களை விழித்தெழச் செய்யாது அவர்களை அறியாமை உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்தக் கருத்துப் போதையையே பாவித்து வருகின்றனர். அடிமை கொண்ட மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வைக் கொன்றுவிட கருத்தாதிக்கமானது ஒரு கனரக ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது.

கருத்துலகமானது எமது சமூக வாழ்வை ஊடுருவி நிற்கிறது. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது. எமது சிந்தனையையும் செயற்பாட்டையும் நிர்ணயித்து வருகிறது. காலையில் எழுந்து பத்திரிகைகளை வாசிப்பதிலிருந்து அல்லது வானொலிச் செய்திகளைக் கேட்பதிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, நாளாந்தம் பல்வகைப்பட்ட உறவுநிலைகளில் மற்றவர்களது எண்ணங்களை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, பார்வைகளை நாம் எதிர் கொண்டு வருகிறோம். எமது மனவரங்கில் தொடர்ச்சியாக, முடிவில்லாது கொட்டப்படும் எண்ணங்களின் இயல்புகளை, கருத்துக்களின் தன்மைகளை, பார்வைகளின் அந்தரங்க நோக்குகளை நாம் விழிப்புணர்வுடன் விசாரணை செய்து பார்க்கத் தவறினால் கருத்தாதிக்கச் சிறையிலிருந்து நாம் விடுதலை பெறுவது சாத்தியமல்ல.



# உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு கொரோனா பேராபத்து வலயமாக அறிவிப்பு




## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்





யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

கொரோனா வைரஸ் அதி ஆபத்து வலயமாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தீவிர கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இந்தப் பகுதியில் அமுலாகின்றன.

நேற்று வரை ஆபத்துக் குறைந்த பகுதிக்கான பச்சை வர்ணத்தில் குறிக்கப்பட்டிருந்த உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகளவு கொரோனாத் தொற்று நோயாளர்கள் அடையாளப் படுத்தப்பட்ட நிலையிலேயே அதி ஆபத்து சிவப்பு வலயமாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவால் இன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்தப் பகுதிளுக்கு நுழை வது, அங்கிருந்து வெளியேறி வது உள்ளிட்ட நடவடிக்கைள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனாக் கட்டுப்பாட்டு செயற்றிட்டங்களும் இந்தப் பகுதியில் தீவிரமாக அமுல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு நேற்றிரவிலிருந்து மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக யாழ். மாவட்ட அரச அதிபரால் இந்த முடக்கல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

### எதையும் மறைக்காமல் உண்மையைக் கூறுங்கள்

# பி.சி.ஆர். சோதனை செய்யுங்கள் கொத்தணிக்கு இடமளியாதீர்கள்

### யாழ். குடாநாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள்



கொழும்பு, டிசெ. 13

யாழ்.குடாநாட்டில் புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எதையும் மறைக்காமல் உண்மைகளைக் கூற வேண்டும். அதே வேளை, அவர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும். அதைவிடுத்து மினுவாங்கொடை மற்றும் பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப் போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப் போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற் பட இடமளிக்க வேண்டாம் என இங்குள்ள மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலை வரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கோரியுள்ளார்

யாழ். மருதனார்மடத்தில் திடீரெனக் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவை ஒழிக்கும் நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள். இந்தநிலையில், இங்கு பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடும் பகுதியிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றார்கள் என்ற தகவல் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலும் வெளியில் இருந்து தான் கொரோனா வைரஸ் தொற்றியிருக்கக் கூடும். தொற்றாளர்கள் தாம் சென்று வந்த இடங்கள் தொடர்பில் எதையும் மறைக்காமல் உண்மைகளைக் கூற வேண்டும்.

வர்த்தகர்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் நடக்க வேண்டும். அவர்கள் வெளியிடங்களில் வர்த்தக ரீதியில் தொடர்புகளை வைத்திருப்பவர்கள். அவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனையைச் செய்ய வேண்டும்.

அதேவேளை, புதிய தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் தங் களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரி சோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும்; சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் கடமைகளுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மினுவாங்கொடை, பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப் போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப் போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என இங்குள்ள மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

# வயோதிபர்கள் 92 பேர் கொரோனாவால் சாவு!

கொழும்பு, டிசெ.13

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக் கத்தின் மூன்றாவது அலை மூலம் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை 136 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 92 பேர் 60 வயதைக் கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் 10 – 30 வயதுக்கிடைப்பட்ட 3 பேரும், 31 – 40 வயதுக்கிடைப்பட்ட4 பேரும், 41 – 50 வயதுக்கிடைப்பட்ட 13 பேரும், 51 – 60 வயதுக்கிடைப்பட்ட 23 பேரும், 61 – 70 வயதுக்கிடைப்பட்ட 29 பேரும், 74 வயதுக்கு மேற்பட்ட 64 பேரும் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

# கொழும்பில் 14,107 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

*கொழும்பு, டிசெ.13*

*கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் ஒக்டோபர் 4 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 14 ஆயிரத்து 107 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 397 தொற்றாளர்கள் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.*

*கொரோனா வைரஸ் தாக்கத்தால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவா னவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற் காக கொழும்பில் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை, மூன்றாவது அலையால் கம்பஹா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 451 பேர் பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 50 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 804 பேர் பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. அங்கு நேற்று மாத்திரம் 136 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

# யாழ்ப்பாணத்தில் சனியன்று 36 பேருக்குத் தொற்றுறுதி

### ஆதாரப்படுத்தியது கொரோனா ஒழிப்புச் செயலணி

கொழும்பு, டிசெ.13

யாழ்ப்பாணத்தில் நேற்று 36 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அரசின் தேசிய கொரோனா ஒழிப்புச் செயலணியின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை வெளியிடப்பட்டுள்ள கடந்த 24 மணி நேரத்துக்கான புள்ளி விவரத்தில் குறித்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று 6 பேருக்கே கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என யாழ். போதனா வையத்திசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹர சிறை வன்முறை தொடர்பில் இதுவரை 255 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.13

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர் பில் சி.ஐ.டியினர் இதுவரை 255 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ள னர் என்று பொலிஸ் பேச் சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித்றோஹணதெரிவித்தார்.



சிறைச்சாலை வைத்தியசாலையில் பணியாற் றிய வைத்தியர்கள், சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் உட் பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

நேற்று மாத்திரம் 27 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# வாக்கெடுப்பில் பங்கெடுக்காத விக்னேஸ்வரன் இருவித நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார்!

## கூட்டமைப்புடன் கூட்டிணையவும் வாய்ப்பு

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் பங்கெடுக்காததன் மூலமாக இரண்டு நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாவதாக, ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்து முதலாவது வரவு – செல வுத் திட்டமாகக் காணப்படுவதன் காரணமாக அதனை எதிர்க்காது ஒரு வாய்ப்புக் கொடுப்பதற்கு விழைந்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, தனது நாடாளுமன்ற உரையொன்றில், இனப்பிரச்சி னைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை வழங்காது விட்டால் ஜனாதிபதி கோட்டாபயவும், பிரதமர் மஹிந்தவும் சர்வதேச நாடுகளுக்கு ஏறி இறங்கும் நிலை ஏற்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

ஆகவே, அவ்விதமான எச்சரிக்கையும் செய்துள்ள நிலையில் ராஜபக்ஷ அரசுக்கும் வாய்ப்பொன்றை வழங்குவதற்கான முதற் சந்தர்ப்பமாக வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பதில்லை என அவர் தீர்மா னம் எடுத்தார் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, வரவு – செலவுத் திட்ட விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளுட னும் தனித்தனியாக தொலைபேசி மூலம் கலந்தாலோசித்திருக்கின்றார் விக்னேஸ்வரன்.

குறிப்பாக, தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், ரெலோ தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் விக்னேஸ்வரன் கலந்துரையாடியிருந்தார்.

வரவு – செலவுத் திட்டத்தில் அவர்கள் எவ்விதமான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், கூட்டமைப்பின் இறுதியான முடிவைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் கோரியிருக்கின்றார்.

இதனையடுத்து கூட்டமைப்பின் நாடா ளுமன்றக் குழு கூட்டம் நிறைவடைந்த பின்னர் கூட்டமைப்பின் 'வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் பங்குபற்றுவதில்லை' என்ற தீர்மானம் விக்னேஸ்வரனுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, தானும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதிருக்கும் தீர்மானத்தினையே கொண்டிருப்பதாக கூறி நிலைப் பாட்டை பகிர்ந்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப் பினர் சிறிதரன், நெடுந்தீவு தொல்பொருள் விவகாரம் உள்ளிட்டவற்றை மையப் படுத்திய உரையாற்றியதன் பின்னர் அவர் அருகில் சென்று அந்த உரையை சிங்கள, ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்து ஊடகங்களுக்கு அனுப்புமாறும் அறிவுரை கூறியும் இருக்கின்றார் விக்னேஸ்வரன்.

ஆகவே விக்னேஸ்வரனின் இவ்வித மான நகர்வுகள், ராஜபக்ஷவினருக்கு சந்தர்ப்பம் அளிக்கும் அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டிணைந்து செயற்படுவதற்குமான 'நல்லெண்ண சமிக்ஞை' ஆக உள்ளதென்று கூறப்படுகின்றது.

# தீவகத்துக்கு வீட்டுத் திட்ட ஒதுக்கீடு மேலதிகமான கொடுப்பனவு அவசியம்

## யாழ். அரச அதிபர் வலியுறுத்து



வீட்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தீவு பகுதிகளுக்கு மேலதிகமான கொடுப்பனவு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் செயற்படுத்தப்படும் 'ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு' வேலைத்திட்டத்தில் 5 ஆம் கட்டமாக யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 84 பேருக்கு யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் உரையாற்றுகையில் –

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கையின் அடிப்படையில் வீடற்றவர்களுக்கும், வறுமையில் உள்ளவர்களுக்கும் இந்த வீட்டுத் திட்டத்தை வழங்கப்பட்டு அது தொடர்ச்சியாக வருடந்தோறும் செயற்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 2020 ஆம் ஆண்டு 5 ஆம் கட்டமாக அமுல்படுத்தப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 345 வீடுகளிலே 46 குடும்பங்களைத் தவிர்ந்த அனைத்து கிராமங்களும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பயனாளிகளுக்கு அடுத்த வருடமும் இதே மாதிரியான ஒரு நடைமுறை செயற்படுத்தப்பட இருக்கின்றது.

அதற்குரிய முன்னேற்ற நடவடிக்கைகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த வீட்டுத்திட்டத்துக்கு வழங்கும் 6 லட்சம் ரூபா பணம் தங்களுடைய அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்காகவே வழங்கப்படுகின்றது எனினும் மக்கள் தம் கட்டுமானத்தைச்வ்சற்று விரிவாக்கி கொள்ளும்போது பணம் போதாமல் காணப்படுகின்றது.

ஆகவே அடிப்படைத் தேவைகளை நீங்கள் முதலில் பூர்த்தி செய்த பின்னர் வீட்டை விரிவாக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன்.

தீவுப்பகுதி மக்களுக்கு ஏனைய பிரதேசங்களை விட செலவு அதிகமாக காணப்படுகின்றது. அதாவது மணல் மற்றும் ஏனைய கட்டடப் பொருள்களைப் பெறுவதற்கான செலவு தீவுப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே தீவு பகுதி நிலைமையும் சற்று வித்தியாசமானது. எனவே அவர்களுக்கு அந்த தொகையை கொடுக்கும் போது மேலதிகமான கொடுப்பனவு ஏதாவது கொடுப்பதற்கு நடவடிக்கையை திணைக்களம் எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தை அமைச்சுக்கு தெரியப்படுத்தி கொள்கை அளவில் அதனை செயற்படுத்த வேண்டும். குறிப்பாக நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு போன்ற தீவு பகுதிகளுக்கு இந்தத் தொகையை அதிகரித்துக் கொடுத்தால் மக்கள் சரியாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியும்.

46 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த வீட்டைப் பெறாது உள்ளார்கள். அவர்களின் கோரிக்கை என்னவென்றால் இந்தத் தொகை போதாது எனவும், அதிகரித்த தொகை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் அதனை ஏற்க மறுக்கிறார்கள்.

எனினும், அதற்கு இன்றுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, தேசிய வீடமைப்பு அதிகார சபை அதன் கொள்கையின்படிதான் செயற்பட முடியும். எனவே பொதுமக்கள் கிடைக்கின்ற இந்த பணத்தை வைத்து தமக்கு அடிப்படையாகத் தேவைப்படுகின்ற இருப்பிட தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் தமது மேலதிக விசாலமான தேவையை செயற்படுத்திக் கொள்ள வேண்டும். – எனவும் தெரிவித்துள்ளார்.

# மாணவியின் மீது பாலியல் துன்புறுத்தல் நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை!

## சாவகச்சேரி தனங்கிளப்பில் சம்பவம்

சாவகச்சேரி – தனங்கிளப்பு பகுதியில் பாடசாலை மாணவிக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் கொடுத்தமையுடன், மாணவியின் தாயார் மீதும் தாக்குதல் நடத்தியவருக்கு எதிராக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அயலவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது–

தனங்கிளப்பு பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் அயல் வீட்டில் வசிக்கும் நபர், வெள்ள நீர் தனது வீட்டு வளவுக்குள் வராத வகையில் அயல் வீட்டு வாசலில் இருந்த மண்ணை வெட்டி, தனது வீட்டு வேலிக்கு போட்டுள்ளார்.

அதனை அவதானித்த வீட்டுப்பெண், எதற்காக எங்கள் வீட்டு வாசலில் இருக்கும் மண்ணை வெட்டுறீங்க, இப்படி என்றால், எங்கள் வீட்டு வாசலில் வெள்ளம் தேங்கும் என சொல்லி இருக்கிறார்.

அதற்கு மண்ணை வெட்டிக்கொண்டு இருந்த நபர், கையில் இருந்த மண் வெட்டியால் அந்தப் பெண்ணைத் தாக்கியுள்ளார். அதனால் அவர் மயக்க முற்று விழுந்துள்ளார்.

அதனை அவதானித்த வீட்டிலிருந்த தாக்குதலுக்கு உள்ளான பெண்ணின் மகளான பாடசாலையில் கற்கும் மாணவி, ஓடி வந்த போது, அந்த நபர் தன்னுடைய சாரத்தை கழட்டி விட்டு மாணவியை நோக்கி 'வா' என அழைத்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த நபரின் குறித்த செயலால் அருவருப்படைந்த மாணவி பயத்தால் வீட்டினுள் ஓடி சென்று கதவைப் பூட்டி விட்டு கூக்குரல் இட்டமையுடன், கிராம சேவையாளர் மற்றும் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.

அதேவேளை மாணவியின் கூக்குரலை அடுத்து அயலவர்களும் கூடியமையை அடுத்து மயக்க முற்ற பெண்ணை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்த்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் தாக்கிய நபரைக் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அந்நபர் விடுவிக்கப்பட்டு உள்ளார் எனவும், அவர் தான் தாக்கியமைக்காக 2 ஆயிரம் ரூபாய் பணம் தருவதாக அந்த பெண்ணிடம் கூறியுள்ளார் எனவும், அதற்கு அவர்கள் சம்மதிக்க வில்லை எனவும் அயலவர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை கணவர் இல்லாது தனது மகளுடன் தனித்து வாழும் குடும்ப பெண் மீது தாக்குதல் நடத்தி, மாணவியுடன் அநாகரிகமாக நடந்து கொண்ட நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதரவற்று நிற்கும் அந்த குடும்பம், அந்நபரால் தமக்கு மீண்டும் ஏதேனும் ஆபத்து நடந்து விடுமோ எனும் அச்சத்தில் உள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவ வேண்டும் என்பதுடன், தாக்குதல் நடத்தியவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என ஊரவர்கள் கோரியுள்ளனர்.

# வவுனியா வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினருக்கு பிடியாணை!

வவுனியா வெடுக்குநாறுமலை ஆதி லிங் கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல் பொருள் திணைக்களமும், நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தமையுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த ஒக்ரோபர் மாதம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது ஆலயத்தின் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ் செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்றில் ஆஜராகியிருந்த பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரை கைது செய்ய வேண் டும் என்றும், தொல்பொருள்கள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்றும் நீதிவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டமையுடன் நவம்பர் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. கடந்த நவம்பர் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் மீண்டும் ஆஜராகிய நிலையில் கொவிட் – 19 அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வழக்குகள் விசார ணைகளுக்கு அழைக்கப்படாமல் தவணை இடப்பட்டிருந்தது. அந்தவகையில் 2021 ஆம் வருடம் தை மாதத்துக்கு வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது மன்று.

இந்நிலையில் வழக்கை முன்னமே அழைக்குமாறு தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார் சார்பாக ஆஜராகிய சட்டதரணிகளால் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்பட்டது.

எனினும் வழக்கின் திகதி மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் தமக்கு தெரியப்படுத்தவில்லை என்று தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் இதனால் அன்றையதினம் நீதி மன்றுக்குச் சமுகமளிக்கவில்லை என்று தெரிவித்தனர். அவர்கள் ஆஜராகதமையால் ஆலய நிர்வாகத்தினருக்கு நீதி மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழரின் பிரச்சினைகள் குறித்து சர்வதேசத்துடன் கூட்டமைப்பு தொடர்ந்து விரிவான தொடர்பாடல்




சுமந்திரன் எம்.பி. தகவல்

மட்டக்களப்பு,டிசெ.14

இந்த ஆட்சியில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்ச்சியாக நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு அறிவித்துக்கொண்டுதான் இருக்கின்றோம். நாங்கள் அறிவிப்பதற்கு முன்பதாகவே அவர்கள் அழைப்பினை மேற்கொண்டு இது குறித்து எங்களிடம் விசாரிப்பார்கள். ஆகையால் எல்லா விடயங்கள் சம்பந்தமாகவும் முழுமையான அறிவித்தல்கள் சர்வதேச சமூகத்திற்கு தொடர்ச்சியாக எங்களால் கொடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.”

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.எம்.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுடன் உரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை கொவிட் காலத்திலே நாங்கள் சந்தித்தபோது அவருக்கு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து பேசியிருந்தோம். பெயர்ப் பட்டியல் கேட்டிருந்தார். அதனை கொடுத்திருந்தோம். அது குறித்து கவனம் செலுத்துவதாக சொல்லியிருந்தார். இன்னும் அவர்கள் எதுவும் செய்யவில்லை.

தற்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், நீதியரசர் விக்னேஸ்வரன், மனோகணேசன் மற்றும் அவருடைய கட்சியினர் ஆகியோரும் சேர்ந்து கைச்சாத்திட்டு கொடுக்கப்பட்ட ஒரு மகஜராகும். அதனை நாங்கள் பிரதமரிடம் கொடுத்த போது ஜனாதிபதியுடன் கலந்து பேசி முடிவொன்றை சொல்வார் எனக் கூறியிருந்தார்.

மயிலந்தனை,மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களெல்லாம் தயாராக இருக்கின்றன. அது ஒரு எழுத்தாணை வழக்கு. குறித்த எழுத்தாணை பெறுவதற்கு முன்னர் கோரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட வேண்டும். அநேகமாக நாளை கோரிக்கைக் கடிதம் அனுப்பப்படும். அதற்குப் பின்னர் ஒருவாரகால அவகாசம் கொடுத்து நாங்கள் வழக்கை தாக்கல் செய்யலாம்.

நாங்கள் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின்போதும் வாக்களிக்கவில்லை. மூன்றாம் வாசிப்பு என்பது ஒரு சம்பிராயபூர்வமான விடயமாகும். இரண்டாம் வாசிப்பே முக்கியமானதாகும். இந்த நாட்டிலே சென்ற வருடமும் வரவு - செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குள் கொவிட் - 19 பிரச்சினை வந்திருக்கின்றது. அரச நிதியை உபயோகிப் பதில் பலவிதமான சிக்கல்கள் இருந்தது. ஆகவே இந்த நாட்டிற்கு வரவு - செலவுத் திட்டமொன்று அத்தியாவசியமாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அது குறித்து வரவு - செலவுத் திட்ட விவாதத்திலே வெளிப்படையாகவே பேசியிருக்கின்றோம். எங்கள் எதிர்ப்பை காண்பித்திருக்கின்றோம். ஆனால் வரவு - செலவுத் திட்டம் ஒன்று தேவை. ஆகவே எதிர்த்துவாக்களிக்கவில்லை. அதேவேளை அதற்கு ஆதரவாகவும் வாக்களிக்க முடியாது. ஏனென்றால் அதிலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் - விசேடமாக வடக்கு, கிழக்கு சம்பந்தமான ஒதுக்கீடுகளில் - பாரபட்சம் இருந்தது. நாங்கள் அதனை சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆகவே இரண்டாம் வாசிப்பின்போது நாங்கள் ஒதுங்கியிருப்பதாக எடுத்தத் தீர்மானத்தையே மூன்றாம் வாசிப்பின்போதும் நாங்கள் நடைமுறைப்படுத்தினோம்.

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று பகுதியில் பிள்ளையார் கோவில் கட்டுவதற்கு அரச தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன். அதில் ஒரு வழக்கில் நானும் ஏனைய இரு வழக்கில் சட்டத்தரணி சயந்தனும் ஆஜராகியிருந்தோம்.

இதில் ஒன்று கன்னியா வெந்நீருற்று பகுதில் பிள்ளையார் கோவில் ஒன்றினை அமைப்பது தொடர்பான வழக்கு. அங்கு பௌத்த தாதுகோபுரம் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றன. அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து தடையுத்தரவு ஒன்றினைப் பெற்றிருந்தோம்.

தற்போது அரச தரப்பு அங்கு பிள்ளையார் கோவில் ஒன்றை கட்டுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்கள். தாது கோபுரத்தினை கட்டமாட்டோம் என்ற உறுதிமொழியை வழங்குவதற்கு தயார் எனவும் தெரிவித்திருந்தார்கள்.

எங்கே அந்த பிள்ளையார் கோவிலை கட்டுவது தொடர்பான இடத்தினை காண்பித்தார்கள். ஆனால் அந்த இடம் எங்களுக்கு ஏற்புடையதாகயிருக்கவில்லை. ஆகையினால் நாங்கள் காண்பிக்கின்ற இடத்தினை அவர்கள் பார்வையிட்டு அங்கு தொல்பொருள்கள் இல்லையென்ற உறுதிமொழியை வழங்கிய பின்னர் அங்கே கட்டலாம் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது பாரிய முன்னேற்றம். இந்த வழக்கு பெப்ரவரி 03ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. இதற்கிடையில் நில அளவையிலாளர்கள் நாங்கள் காண்பிக்கும் இடங்களுக்கு சென்று அது பொருத்தமானதா என்பதை பார்த்து அனுமதியை வழங்கிய பின்னர் அங்கு பிள்ளையார் ஆலயம் கட்டப்படும்.

மற்றைய இரண்டு வழக்குகளும் தென்னமரவாடியிலும் திரியாயிலும் விவசாயிகளின் காணிகளை அபகரிப்பதை தடுத்து நாங்கள் இடைக்கால தடையுத்தரவினைப. பெற்றிருந்தோம். அந்த வழக்கில் சட்டத்தரணி சயந்தன் ஆஜராகியிருந்தார். அங்கும் அந்த இடைக்கால தடையுத்தரவினை நீடிக்ககூடாது என்று அரசதரப்பு வாதிட்டது. அந்த வயல் காணிகளுக்குள்ளும் தொல்பொருள்கள் இருக்கின்றன எனக் கூறினார்கள். நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இடைக்கால தடையுத்தரவினை நீடித்திருத்திருக்கின்றது. விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்யமுடியும்.

அதேவேளையில் தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் எங்காவது தொல்பொருள்கள் இருப்பதை அடையாளம் காட்டினால் அவர்கள் விவசாயிகளுக்கு முன்னறிவித்தல் வழங்கி அந்த அடையாளம் காட்டுதலை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் விவசாயிகளும் அந்த பொருள்களைச் சேதமின்றிப் பாதுகாப்பார்களென்று வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கும் பெப்ரவரி 03ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# முஸ்லிம்களின் உடல்கள் தகனம்: வித்தியாசமான முறையில் எதிர்ப்பு!

## வெளிப்படுத்தினார் அலி ஸாஹிர் மௌலானா

கொரோனாவைரஸ்தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுகின்றமையை எதிர்த்து, முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா வித்தியாசமான முறையில் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த (சனிக்கிழமை) பொரளை மயான நுழைவாயிலில் வெள்ளைத் துணிகளைக்கட்டி, தனது எதிர்ப்பை வித்தியாசமான முறையில் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சரான அலி ஸாஹிர் மௌலானா தனது முகப்புத்தகப் பதிவில் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலங்கள் தகனம் செய்யப்படுகின்றமைக்கு எதிராக அமைதியான முறையில் பலமான எனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளேன்.

பிறந்துவெறும் 20 நாள்களேயான பாலகன் ஷாயிக் மற்றும் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த 100 பேரின் உடல்கள் இங்குதான் வலுக்கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டன.

ஆகவேதான், நான் எனது முழு எதிர்ப்பையும் இந்த பொரளை மயானக் கதவில் வெள்ளைத் துணியைக் கட்டி வெளியிட்டுள்ளேன்.

எத்தனை முறை கோரிக்கைகள் முன்வைத்தாலும், அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது ஒரு தேசத்தின் கனத்த அவமான சின்னமாக இந்த மயான கதவினில் இந்த வெள்ளைத்துணிகள் தொங்கட்டும். - எனப் பதிவேற்றியுள்ளார்.

இதேவேளை, ஆரோக்கியத்தை பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்யும் விவகாரம் தொடர்பாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், பிரதமர் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில், இலங்கையில் கொரோனா வைரஸால் உயிரிழக்கும் அனைவரினதும் உடல்களை தகனம் செய்யவேண்டும் என்ற செய்தி கவலை அளிக்கின்றது என பிரிட்டனின் முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.



இந்த கொள்கை இலங்கையின் முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் மத சுதந்திரத்துக்கு முரணானது என்பதுடன் இந்த விவகாரம் தொடர்பில் காணப்படும் விஞ்ஞான ரீதியான முடிவுகளுக்கும் முரணானது எனவும் பிரித்தானியாவின் முஸ்லிம் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படும் விடயத்தில் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சரான அலி ஸாஹிர் மௌலானா, தனது எதிர்ப்பை பொரளை மயான நுழைவாயிலில் வெள்ளைத்துணிகளைக்கட்டி வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மத வழிபாடுகளுக்கு ஒரு தடவைக்கு 25 பேர் செல்லலாம்!

## மாவட்ட அரசாங்க அதிபர் உத்தரவு

மட்டக்களப்பு, டிசெ. 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் மத தலங்களுக்கு 5 பேருக்கு மேல் வழிபட செல்ல விதிக்கப்பட்ட தடை கடந்த சனிக்கிழமை முதல் 25 பேர் ஒரு தடவைக்கு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சென்று வழிபடக் கூடியதாக அமையுமென மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 8 ஆம் திகதிக்கு பின்னர் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி எந்தவிதமான புதிய தொற்றாளர்களும் இனங்காணப்படாதமையால் மற்றும் நீண்ட காலமாக மத தலங்களுக்கு 5 பேர் என்ற எண்ணிக்கையில் சென்று வழிபடமுடியும் என விதிக்கப்பட்டிருந்த எண்ணிக்கையை அதிகரிக்குமாறு மத தலைவர்கள் தொடர்ந்தும் கேட்டுக்கொண்டதற்கமைய அந்த எண்ணிக்கையை 25 பேர்களாக அதிகரிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



இந்த மத தலங்களுக்கு ஒரு தடவைகளில் 25 பேர் சென்று வழிபாடு செய்யமுடியும் என இருந்தபோதும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செயற்படவேண்டும் என்பது கண்டிப்பானது என்பதுடன் இதனைக் கவனிப்பது மத தலங்களின் பொறுப்பாகும். இதனை மீறுபவர்களுக்கு எதிராக சுகாதார அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள். - என்றார்.

# சகல மக்களையும் சமத்துவமாக நடத்தும் கடப்பாட்டை அரசு மறந்துவிடக் கூடாது!

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

அடக்கு முறைக்கும் அச்சத்திற்கும் உட்பட்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தை மேலும் வலுவிழக்கச் செய்வதற்கானவழிமுறையையே இலங்கை அரசாங்கம் தெரிவு செய்திருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரையும் சமத்துவத்துடன் நடத்தவேண்டிய கடப்பாடு தமக்கு இருப்பதை இலங்கை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய அலுவலகத்தின் தொடர்பாடல் மற்றும் பிரசார உதவியாளர் ரெஹாப் மஹமூர் பின்வருமாறுகருத்துவெளியிட்டிருக்கிறார்:-

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பெருமளவானோர் அச்சத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கொரோனா வைரஸ் தொற்று ஏற்படல், தம்மால் வைரஸ் தொற்று பிறருக்குப் பரவுதல், தமது அன்பிற்குரியவர்கள் வைரஸ் தொற்றால் துன்பப்படுவதைக் காணுதல் மற்றும் அவர்களின் மரணத்தை எதிர்கொள்ளல் உள்ளிட்ட அச்சம் பலர்மத்தியிலும்ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், மேற்கூறப்பட்ட அச்சத்திற்கு மேலாக தமது அன்பிற்குரியவர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் பட்சத்தில் அவர்களை அடக்கம் செய்யமுடியாது என்றும் அவர்களுக்கான இறுதி கௌரவத்தை அளிக்கமுடியாது என்றும் அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படும் நாட்டில், தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அவர்களது மத ரீதியான நம்பிக்கையின் பிரகாரம் அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் அந்த சடலங்கள் வலுகட்டாயமாகத் தகனம் செய்யப் படுகின்றன. இது இலங்கையின் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்கள் அமைதியாக வாழ்வதற்கு இயலாத சூழ்நிலை காணப்படுவதுடன் அவர்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக அச்சம் அதிகரித்துவரும் நிலையில், தற்போது முஸ்லிம்களின் மரணம் கூட நிம்மதியானதாக இருக்காது என்பதை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் கொவிட் - 19 என்ற காரணத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்கள் மற்றும் தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுபவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதைக் கட்டாயமாக்கியிருக்கும் மிகச்சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

எனினும் இந்த வருடத்தொடக்கத்தில் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் தகனம்செய்தல்மற்றும் அடக்கம் செய்தல் ஆகிய இரண்டுக்குமே அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கொரோனா வைரஸ் தொற்றால் முதன்முறையாக முஸ்லிம் நபரொருவர் உயிரிழந்தபோது, அவரது குடும்பத்தினரின் விருப்பத்தையும் மீறி அவரின் சடலம் வலுகட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டது. அதற்கு முஸ்லிம் மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் சமூகத்திலிருந்து வலுவான எதிர்ப்பு வெளிப்பட்டமையைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சால் 'தகனம் செய்வது' கட்டாயமாக்கப்பட்டது.

எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களிலும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை உரிய முறையில் தகனம் செய்யவோ அல்லது அடக்கம் செய்யவோ முடியும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாகஆராய்வதற்குஅரசாங்கத்தால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் தகனம் செய்வதைக் கட்டாயமாக்கும் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பலரும் உணர்ந்துகொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ஏற்கனவே அடக்கு முறைக்கும் அச்சத்திற்கும் உட்பட்டிருக்கும் ஒரு சமூகத்தை மேலும் வலுவிழக்கச்செய்வதற்கான வழிமுறையையே இலங்கை தெரிவு செய்திருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரையும்சமத்துவத்துடன் நடத்தவேண்டிய கடப்பாடு தமக்கு இருப்பதை இலங்கை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

# எயார்லைன்ஸ் சேவைகள் மேலும் அதிகரிக்கப்பட்டது!




கொழும்பு, டிசெ.14

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், கட்டுநாயக்க மற்றும் சிங்கப்பூர் இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை வாரத்திற்கு 03 ஆக உயர்த்த இலங்கை ஏர்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தவிர, கட்டுநாயக்க – மலேசியாவின் கோலாலம்பூருக்கிடையேயான வாராந்திர விமான சேவையை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் தொடர்புடைய விமான போக்கு வரத்து கட்டுப்பாடுகள் மற்றும் தொடர்புடைய நாடுகளால் விதிக்கப்பட்ட எல்லை மூடல்களுக்கு உட்பட்டு இயங்கும்.

இலங்கை ஏர்லைன்ஸுடன் இந்த இடங்களுக்கும் அதற்கு அப்பாலும் பயணிக்க விரும்பும் பயணிகள் கொழும்பு, காலி மற்றும்கண்டியில்உள்ளவிமான நிறுவனத்தின் டிக்கெட் அலுவலகங்களிலிருந்து அல்லது தங்களுக்கு விருப்பமான பயண முகவர் மூலமாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம்.

மேலும்தகவலுக்குஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உலகளாவிய தொடர்பு மையத்தை 009411 7771979 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது www.srilankan.comஎன்ற இணையத் தளத்தைப் பார்வையிடவும்.

# போசணை நிறைந்த ஆயுர்வேத பானம் தர்மிக்கவின் ஔடதத்துக்கு சிபாரிசு!

## அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவிப்பு

தம்மிக பண்டார என்ற நபரால் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பு பானத்தை 'போசணை நிறைந்த ஆயுர்வேத பானம்' என்ற அடிப்படையிலேயே நாம் பரிந்துரை செய்தோம். எனினும் அது உரிய மருத்துவ மற்றும் இரசாயனப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே மருந்துப்பொருளாக அறிவிக் கப்படும் என்று சுதேச வைத்தியமுறை மேம்பாடு மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் கூறியிருப்பவை வருமாறு –

நான் அதனை அருந்துவதற்கு சபாநாயகருக்கு மாத்திரமே அழைப்புவிடுத்தேன். ஒட்டுமொத்த நாடாளுமன்றத்துக்கும் அதனை வழங்கவில்லை. அத்தோடு போசணை நிறைந்த ஓர் ஆயுர்வேத பானம் என்ற அடிப்படையிலேயே நாம் அதனை வழங்கினோம். எமது உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆயுர்வேத பானங்கள் மற்றும் உணவுகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் தேவையற்ற அச்சத்தை விதைத்து வருகின்றனர்.

ஆனால், அவ்வாறு அச்சப்படுவதற்கான எந்தவோர் அவசியமும் இல்லை. அந்த ஆயுர்வேத பானம் உரிய மருத்துவ மற்றும் இரசாயனப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே மருந்தாக மாறும். அதற்கு குறித்தவொரு காலம் அவசியமாகும். அத்தோடு தம்மிக பண்டார மாத்திரமன்றி எமது நாட்டிலுள்ள மேலும் பல ஆயுர்வேத நிலையங்களும் மருத்துவர்களும் தமது உற்பத்திகளைக் கையளித்திருக்கிறார்கள். அவை தொடர்பிலும் நாம் விசேட கவனம் செலுத்துவோம். – என்றார்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம்: வலியுறுத்தி மஸ்கெலியாவில் போராட்டம்!

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி, நேற்று மஸ்கெலியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மக்கள்விடுதலை முன்னணியின் பெருந்தோட்ட தொழிற்சங்கப் பிரிவான, அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கமே இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தது.

சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன எனவும் கொரோனா நெருக்கடியால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, 2021 ஜனவரி முதல் 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாகவும் இது அடிப்படை நாட்சம்பளமாகவே வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அதனை விடுத்து தொழிலாளர்களை மீண்டும் ஏமாற்றும் விதத்தில் சம்பள உயர்வு இடம்பெறக்கூடாது எனவும் போராட்டக்காரர்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருதனார்மடம் பொதுச் சந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருதனார்மடம் பொதுச்சந்தை கொத்தணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 33ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள முதலாவது கொரோனா வைரஸ் பரவல் கொத்தணி இது வாகும். நாட்டில் ஒக்டோபர் 4ஆம் திகதிக்குப் பின்னர் மினுவாங்கொடை, பேலியகொட, அக்கரைப்பற்று மற்றும் சிறைச்சாலை கொத்தணிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள 5ஆவது கொரோனாக் கொத்தணி இதுவாகும்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மருதனார்மடம் சந்தி ஓட்டோ தரிப்பிடத்தில் உள்ள சாரதிகளிடம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் முடிவில் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரியாகவும் ஓட்டோ சாரதியாகவும் உள்ள 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை இரவு கண்டறியப்பட்டது.

அதையடுத்து அவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார். அவரது குடும்பம் உடுவில் பிரதேச சபை ஒழுங்கையில் உள்ள அவர்களது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தநிலையில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனின் அறிவுறுத்தலில் மருதனார்மடம் பொதுச் சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வியாபார நிலையங்களில் உள்ளவர்கள் என 394 பேரிடம் நேற்றுமுன்தினம் மாதிரிகள் பெறப்பட்டன.

மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரிசோதனையில் ஓட்டோ சாரதியின் குடும்பத்தைச் சேர்ந்த 6 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அவர்கள் கோப்பாய் கல்வியியல் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்றுமுன்தினம் பெறப்பட்ட மாதிரிகளில் 104 பேரின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளும், நேற்று யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் இருந்த பெறப்பட்ட மாதிரிகளின் பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகளும் நேற்றிரவு வெளியிடப்பட்டன.

இதேவேளை, மருதனார்மடம் பொதுச்சந்தைப் பகுதியில் எடுக்கப்பட்டு அநுராதபுரத்துக்கு பி.சி. ஆர். பரிசோதனைக்காக நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்ட மாதிரிகளின் முடிவுகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# கொழும்பு மாநகரத்தின் சில பகுதிகளுக்கு இன்று விடுதலை



கொழும்பு,டிசெ.14

கொழும்பின் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து இன்று காலை 5 மணி முதல் விடுவிக்கப் படவுள்ளன என இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் வேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி,கொழும்பின்கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறிசந்த செவண குடியிருப்பு தொகுதி மற்றும் சிறிமுத்து உயன குடியிருப்பு தொகுதி ஆகியனதனிமைப்படுத்தலில் இருந்துவிடுவிக்கப்படவுள்ளன.

அத்துடன் மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்ஹிரு செவண ரயில் வீடமைப்பு திட்டம் மற்றும் பொரளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறிசர உயன ஆகியன தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வீதி விபத்தில் ஒருவர் சாவு

இரத்தினபுரி – கொழும்பு வீதியில் பண்டாரநாயக்க மாவத்தைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 70 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றினை வீதியின் குறுக்காக தள்ளிச் சென்ற போது இரத்தினபுரியில் இருந்து குருவிட்ட நோக்கி பயணித்த லொறி அவர் மீது மோதியுள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த நபர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# கொரோனாத் தடுப்புக்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஔடதங்களை விஞ்ஞான ஆய்வுகளுக்கு உட்படுத்துக!

## பிரதமர் மஹிந்த கோரிக்கை

கொழும்பு. டிசெ.14

கொரோனாவுக்காகத் தேசிய மட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சிகிச்சை முறை மற்றும் ஔட தங்களை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய கொழும்பு பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருத்துவமுறை, கலாநிதி ஹர்ஷ சுபசிங்க மற்றும் இந்திக ஜாகொட ஆகியோரால் கொரோனாவிற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட உள்ளூர் சிகிச்சை முறை மற்றும் கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பாணி போன்றவற்றை மேலும் விஞ்ஞான ரீதியில் ஆய்வுக்கு உட்படுத்தி உறுதி படுத்துவதற்கு பிரதமர் தேசிய ஆராய்ச்சி சபைக்கு பரிந்துரைத்துள்ளார்.

கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பாணி தொடர்பான ஆராய்ச்சிப் பத்திரமொன்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பேராசிரியர்களின் தலையீட்டுடன் முன்வைக்கப்படுவதுடன், அது தொடர்பான ஆய்வுக்கு இந்நாட்டின் அனைத்து மருத்துவ கல்லூரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உடலியல் விஞ்ஞானம் தொடர்பான நிபுணத்துவ அறிவுமிக்க சிரேஷ்ட பேராசிரியர்கள் ஐந்து பேர் மற்றும் தேசிய ஆராய்ச்சி சபைக்காக தேசிய ஆராய்ச்சி சபையின் தலைவர் மகப்பேறியல் மற்றும் பெண்நோயியல் வைத்திய நிபுணர் பேராசிரியர் ஹேமந்த தொடம்பஹல ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், உலகில் கொரோனா தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி வகைகள் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பிலான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு இதற்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமைய தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொரோனாவுக்காக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சிறந்த மூன்று தடுப்பூசிகள் தொடர்பான சீ.டீ.ஏ. அறிக்கை தேசிய ஆராய்ச்சி சபையால் சுகாதார அமைச்சர் பவித்ராவன்னியாச்சியிடம் கையளிக்கப்பட்டது.

# 39 இராஜாங்க அமைச்சுகளுக்கும் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்!

## வர்த்தமானியும் வெளியீடு

39 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் இந்த நியமனங்கள் செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவை, தொற்றுநோயியல் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக வைத்தியர் அமல் ஹர் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி குமாரசிறியும் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜி.சி.கருணாரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடுவாவல நியமிக்கப்பட்டுள்ளார்.

# அக்கரைப்பற்று கொத்தணி தொற்று 400 ஆக அதிகரிப்பு

கிழக்கு மாகாணத்தில் உருவாகியுள்ள அக்கரைப்பற்று கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 400 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று வரையான தொற்று நிலவரத்தின்படி அக்கரைப்பற்றில் 241 பேருக்கும், அட்டாளைச்சேனையில் 49 பேருக்கும், ஆலையடிவேம்பில் 16 பேருக்கும், சாய்ந்தமருதுவில் 17 பேருக்கும், திருக்கோவிலில் 9 பேருக்கும், பொத்துவிலில் 9 பேருக்கும், கல்முனை தெற்கில் 9 பேருக்கும், கல்முனை வடக்கில் 6 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சம்மாந்துறையில் 7 பேருக்கும், இறக்காமத்தில் 11 பேருக்கும், காரைதீவில் 2 பேருக்கும், நாவிதன்வெளியில் 2 பேருக்கும், நிந்தவூரில் 2 பேருக்கும், அம்பாறையில் 4 பேருக்கும், உஹனவில் 5 பேருக்கும், தமணவில் 4 பேருக்கும், பதியத்தலாவ 3 பேருக்கும், தெஹியத்தகண்டியவில் 3 பேருக்கும், மகாஓயாவில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 97 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2020 இல் வெளியிடப்பெற்றது.